# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 042/ந/2017

ஆணை எண். 97/2018

நாள் : 10/04/2018

**திரு S. இராஜாராமன்,**
**கும்பகோணம் – 612 001.** – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
கும்பகோணம் நகராட்சி,
கும்பகோணம். – எதிர் மனுதாரர்

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம், ஸ்ரீ நகர் காலனி விரிவு–3, எண்.22/94, கார்த்திக் இல்லம் முகவரியில் வசிக்கும் திரு S. இராஜாராமன் அவர்களின் 08.03.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 10.03.2017 அன்று பெறப்பட்டு, 042/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, அவரது வாக்குமூலம், நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரின் அறிக்கைகள் பரிசீலிக்கப்பட்டுக் கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம், ஸ்ரீ நகர் காலனி விரிவு–3, எண்.22/94, கார்த்திக் இல்லம் முகவரியில் வசிக்கும் திரு S. இராஜாராமன் என்பவர், தான் குடியிருக்கும் வீட்டின் தரைதளம் மற்றும் முதல் தளம் ஆகியவற்றிற்கு விதிக்கப்பட்ட இரண்டு சொத்து வரி விதிப்புகளின் அடிப்படையில், பாதாள சாக்கடை சேவைக் கட்டணம், தரைதளம் மற்றும் முதல் தளம் ஆகிய இரண்டு தளங்களுக்கு இரண்டு கேட்புகள் செலுத்துமாறு கும்பகோணம் நகராட்சிக் கோரியுள்ளது எனத் தெரிவித்து, ஒரே இணைப்புக்கான கட்டணம் மட்டும் செலுத்த ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். 27.04.2017 அன்று மனுதாரரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. ஒரே வீடு, ஒரே உரிமையாளர், ஒரே கதவு எண் என்ற அடிப்படையில் சொத்துவரியும், சாக்கடை வரியும் ஒரே வரி விதிப்பு மட்டும் இருக்க வேண்டும் என விசாரணையின்போது தெரிவித்தார். மேலும், பாதாள சாக்கடைத் துணை விதி எண். 6(2) அடுக்குமாடிக் குடியிருப்பில் வசிப்பவர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்றும், மேற்குறிப்பிட்ட விதி தனது குடியிருப்புக்குப் பொருந்தாது எனவும் 04.07.2017 நாளிட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

2. கும்பகோணம் நகராட்சி ஆணையர் தனது அறிக்கையில், மனுதாரரின் வீட்டின் இரண்டு பகுதிகளும் வெவ்வேறு ஆண்டுகளில் கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருவதாகவும், எனவே, ஒவ்வொரு குடியிருப்புப் பகுதிக்கும் தனித் தனியே பாதாள சாக்கடை வைப்புத் தொகை மற்றும் சேவைக்கட்டணம் செலுத்த வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். நகராட்சி நிர்வாக ஆணையர் தனது 20.03.2018 நாளிட்ட கடிதத்தில், மனுதாரரின் இரண்டு குடியிருப்புப் பகுதிகளுக்கு சொத்துவரி தனித்தனியே விதிக்கப் பட்டுள்ளதென்றும், பாதாள சாக்கடை இணைப்பு ஒன்றாக இருந்தாலும், இரண்டு குடும்பங்கள் பயன்படுத்தும் குடியிருப்புப் பகுதிகளுக்கு இரண்டு சொத்து வரி விதிப்புகள் உள்ள நிலையில், புதை சாக்கடை கழிவு நீர் இணைப்பைப் பயன்படுத்திக் கொள்ள வைப்புத் தொகையும் சேவைக்கட்டணமும் இரண்டு வரி விதிப்பு எண்களில் வசூலிக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

3. மனுதாரரின் முறையீட்டு மனு, அவர் விசாரணையின்போது அளித்த வாக்குமூலம் கும்பகோணம் நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் ஆகியோரின் அறிக்கைகள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் தனது வீட்டின் தரைதளம் மற்றும் முதல் தளத்தை வெவ்வேறு ஆண்டுகளில் கட்டி இரண்டு சொத்து வரி விதிப்புகளை செலுத்தி வருகிறார். நகராட்சி ஆணையரின் அறிக்கையினை நோக்குகையில் இரண்டு மின் இணைப்புகளைப் பெற்றுத் தனித்தனி மின் அளவு மாணிகளை பொறுத்தியுள்ளதாகத் தெரிய வருகிறது. ஒரே வீடு, ஒரே உரிமையாளர் ஒரே கதவு எண் என்ற மனுதாரரின் தாரக மந்திரத்தின்படி ஒரே சொத்துவரி மற்றும் ஒரே புதை சாக்கடை வரி இருக்கவேண்டும் என விரும்புகிறார். ஆனால் மின் இணைப்புகள் மட்டும் இரண்டு குடியிருப்புப் பகுதிகளுக்கு தனித்தனியாக ஏன் பெற்றுள்ளார் எனத் தெரியவில்லை. வெவ்வேறு மின்னோட்ட அளவீடுகளின் அடிப்படையில் கட்டணம் கணக்கிடப்படுவதால், மின் கட்டணச் சலுகை பெறுவதற்கே இரண்டு மின் இணைப்புகளை பெற்றுள்ளார் என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. முறையீட்டு மனுதாரர் தரைதளம் மற்றும் முதல் தளத்திற்கு தனித்தனியே சொத்துவரி செலுத்தியும், இரண்டு மின் இணைப்புகளுக்கு கட்டணம் செலுத்தியும் வருகிறாரென தெரியவருகிறது. புதை சாக்கடைக்கு மட்டும் ஒரு இணைப்பு கோரும் மனுதாரரின் கோரிக்கை ஏற்புடையதாக இல்லை. எனவே, மனுதாரரின் முறையீட்டினை ஏற்பதற்கு வலுவான காரணங்கள் எதுவும் இல்லை எனக் கருதி, அம்முறையீட்டு மனுவினை நிராகரித்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 10–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

16.4.11

18/4/18

பெறுநர்

1. திரு S. இராஜாராமன்,
கார்த்திக் இல்லம்,
22/94, ஸ்ரீ நகர் காலனி விரிவு –3,
கும்பகோணம் – 612 001,
தஞ்சாவூர் மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
கும்பகோணம் நகராட்சி,
கும்பகோணம் – 612 001,
தஞ்சாவூர் மாவட்டம்.

3. நகராட்சி நிர்வாக ஆணையர்,
நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை – 600 005.

4. நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர்,
தஞ்சாவூர் மண்டலம்,
தஞ்சாவூர்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்